**கல்வியமைச்சு – E Thaksalawa** **மாதிரி வினாப்பத்திரம் - 01**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**
**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II** **ஒரு மணித்தியாலம்**
**Tamil Language and Literature I, II** **One hours**

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. கஞ்சமுகம் நோக்காது மன்னிலத்து வாழேன்…… இங்கு **“**கஞ்சம்’ என்பது
   1. வதனம் 2. அழகு 3. தாமரை 4. நிலவு

2. பெரிது இனிது பேதையர் கேண்மை,,,,,, இங்கு ‘‘கேண்மை’’ என்பது
   1. நட்பு 2. பகைமை 3. நன்மை 4. உறவு

3. ‘‘வாடி இருக்குமாம் கொக்கு’’ ‘‘வாடி’’ என்பதன் எதிர்க்கருத்து
   1. சோர்ந்து 2. உதிர்ந்து 3. மலர்ந்து 4.விரிந்து

4. வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ வள்ளல் என்பதன் எதிர்க்கருத்து
   1. கொடை 2. உலோபி 3. அறவோன் 4.வணிகன்

5. வெற்றிலைப் பெட்டி அருகில் இருந்தது படிக்கத்தைக் காணவில்லை. ‘‘படிக்கம்’’ என்பது
   1. பாத்திரம் 2 உரல் 3 உலக்கை 4. பாக்கு

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் **பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

6. அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு….. **“புரவி**’’ என்பதன் ஆண் பெண் மரபுச் சொற்கள் முறையே
   1 களிறு, பிடி 2 குண்டு, வடவை 3. களிறு, வடவை 4. போத்து, பிணா

7. டைரக்டரி ( Directory ) உண்டாக்கி அதிலே எங்கள் வேலைகளை சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். டைரக்டரி என்பதன் தமிழ் வடிவம்
   1. விபரப்புத்தகம் 2. பதிவுப்புத்தகம் 3. கோப்பு 4. முகப்புத்தகம்

8. ஆலி,ஆளி,ஆழி என்பன முறையே தரும் பொருள்
   1. ஒலி, சிங்கம், கடல் 2. சிங்கம், ஒலி, கடல்
   3. கடல், சிங்கம், ஒலி 4 சிங்கம், கடல், ஒலி

9. கட்டு, மலம், கயிறு, உறவு எனும் பல பொருள் தரும் ஒரு சொல்
   1. சரம் 2. கலம் 3. வடு 4.பந்தம்

10. கூட்டத்தைக் குறிக்கும் ‘‘திரள்’’ என்ற மரபுப்பெயருக்குப் **பொருத்தமற்றது**.
    1 .சனம் 2. படைவீரர் 3. உடு 4. சேனை

11. மலை மடியில் கண்வளர்த்தோம். **“**கண் வளர்தல்**”** என்பதன் பொருள்
    1. நித்திரை விட்டெழுதல் 2. துயிலுதல் 3. கண்ணை வளர்த்தல் 4. கண் தூங்குதல்

12. செல்வங்களைப் பிறருக்குக் கொடுக்காது தாமே அனுபவிக்க வேண்டும் என்று நினைப்பவர்களின் பணத்தினை கயவர்கள் கவர்ந்து போவர். இதற்கு பொருத்தமான பழமொழி

1. கேடு வரும் முன்னே மதி கெட்டுவரும் பின்னே
2. உண்ணாச் சொத்து மண்ணாய் போகும்
3. ஈயார் தேட்டை தீயார் கொள்வர்
4. எச்சில் கையால் காகம் துரத்தாதவன்

13. ….. அவள் போம்வழி முற்றிலும்
கண்கள் பின்னழ கார்ந்து களித்திட

இச்செய்யுளடியால் சிறப்பிக்கத்தக்க அருஞ்சொற்றொடர்

1. வழிமேல் விழிவைத்து 2. வைத்தகண் வாங்காமல் பார்த்து
3. ஊணுறக்கமின்றி 4. கண்ணுக்குக்கண்ணாக

14. பின்வரும் விடயங்களை அட்டவணைப்படுத்துக. ‘‘அட்டவணை’’ என்பது

1 மராட்டியமொழி 2. ஒல்லாந்தமொழி 3.போரத்துகேய மொழி 4 பிரான்சிய மொழி

15. நிலவை மூடிமூடி ஆலிங்கனம் செய்கையில் …….. ‘‘ஆலிங்கனம்’’ என்பது

1. தழுவுதல் 2. நடனம் 3. அசைவு 4 மறைத்தல்

16. தமக்குத் தீமை செய்யும் பகைவர்களின் கொடுமைகளையும் தாங்கிக் கொண்டிருப்பதற்குப் பொருத்தமாகப் பயன்படுத்தத்தக்க உவமைத்தொடர்

1. ஆனைவாய் கரும்புபோல் 2. எதற்கும் இடம் கொடுப்பது போல்
3. அடிவயிற்றில் இடி விழுதல் போல் 4. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல்

17. பெண்ணும் சுற்றமும் உடன்படமால் வலிந்து கொள்ளும் மணம்

1. காதல் திருமணம் 2. இராக்கதம் 3. மடலேறுதல் 4. சுயம்வரம்

18. இரு பாத்திரங்கள் பேசுவது போன்ற பாணியில் எழுதுவது

1. கட்டுரை 2. பேச்சு 3. உரையாடல் 4. நாவல்

19. பின்வருவனவற்றுள் அடுக்கிடுக்குத் தொடராக மாற்றமுடியாத அடுக்குச் சொல்

1. அணித்து அணித்து 2. கொதித்து கொதித்து 3. ஓடி ஓடி 4. பாடிப் பாடி

20. மோன! ‘‘இந்தப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வா’’ இங்கு ‘‘மோன’’ என்பது

1. கிழக்குப்பிரதேச வழக்கு 2. வடக்குப்பிரதேச வழக்கு
3. மேற்குப்பிரதேச வழக்கு 4. மலையகப்பிரதேச வழக்கு

• **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. மூன்றுநிலை மெய்ம்மயக்கமாக வரத்தக்க சொல்

1. கால்வாய் 2. உலக்கை 3 பஞ்சம் 4. தேர்ச்சி

22. பின்வருவனவற்றுள் ஆக்கவினையடையாக அமைவது.

1. பாய்ந்து 2. வேகமாக 3. மேன்மையான 4. முயற்சியான

23. உரிச்சொல் கொண்டமைந்த சொல்லில் வேறுபட்ட பொருளினை உணர்த்தும் சொல்

1. கடிநாய் 2 கடிமலர் 3. கடிகமலம் 4. கடிமாலை

24. "பாவை தன் வரமும் என் வரமும் வழுவா வண்ணம் கோடுகின்ற மொழியவன்…..: இங்கு இடம் பெற்றுள்ள எதிர்மறை இடைநிலைச் சொல்

1. வரம் 2. வழுவா 3. வண்ணம் 4. கோடு

25. கன்றினது உடல் நக்கிக் கனைக்கின்ற பசுக்கள். இங்கு இடம் பெற்றுள்ள வழு

1. எண்வழு 2. இடவழு 3. திணைவழு 4. மரபுவழு

26. நிறைமதி தன் துணைவியர்கள் சூழவரும் கோலம் "நிறைமதி" என்பது

1. வினைத் தொகைத் தொடர் 2. வேற்றுமைத் தொகைத் தொடர்
3. பண்புத்தொகைத் தொடர் 4. அன்மொழித்தொகைத்தொடர்

27. எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்றுக்கு உதாரணமாக அமைவது

1. போகாதீர்கள் 2. செய்யாதே 3. பாடின 4. போகான்

28. பின்வருவனவற்றுள் உவமையணி இடம்பெற்றமைந்த தொடர்

1. சுட்டும் விழிச்சுடர்தான் - கண்ணம்மா சூரிய சந்திரரோ
2. மனமெனும் தோணி பற்றி மனமெனும் கோலை ஊன்றி
3. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு
4. வெள்ளைநிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது.

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

29. 1) இருபெயரொட்டுப் பண்புத்தொகை : சாரைப்பாம்பு, மன்னன் கரிகாலன், தெங்கு
2) இடப்பொருள் வேற்றுமை : வானத்தில் குருவி, மதிலில்பூனை, மரத்தில் பழம்
3) வண்ணப்பண்புத்தொகை : செந்தாமரை, வெண்பலகை, நீலவானம்
4) வேற்றுமைத் தொகைத் தொடர் : நீர் குடித்தான், வீடு புகுந்தான், பூச்சூடினான்

30. 1) இலக்கணப்போலி : வாய்கடை, இல்முன், கால்வாய்
2) உடனிலைமெய்மயக்கம் : தேர்ச்சி, பட்டம், அக்கா
3) ஆக்கப்பெயர் : முதலாளி, படிப்பு, காட்சி
4) காரணஇடுகுறிப்பெயர் : முக்கண்ணன், மும்முரசு, முள்ளி

- **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்பவதற்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

31. தமிழ் எழுத்துக்களை அகரவரிசைப்படி எழுதிவைக்கும் தொகுதி……………….ஆகும்

1. நிகண்டு 2. கலைக்களஞ்சியம் 3. அகராதி 4. அரிச்சுவடி

32. மாமரம், பூமரம், பாமரம்…………………..சொற்களாகும்

1. உவமைஅணி 2. எதுகைஅணி 3. மோனைஅணி 4.சிலேடைஅணி

33. கர்ணன்…………………….மறவாமல் வாழ்ந்து காட்டியுள்ளான்

1. செய்ந்நன்றி 2. செய்னன்றி 3. செய்ந்னன்றி 4. செய்நன்றி

முழுப் பதிப்புரிமையுடையது **All Rights Reserved** 

34. ஒரு பொருளுக்கு ஒப்பாக எடுத்துச் சொல்லப்படும் மற்றொரு சொல்………………ஆகும்

1. உவமேயம் 2. உவமானம் 3. உருவகம் 4. சிலேடை

• **வாக்கியங்களில் முதற் பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க**

35. தம்பியா தங்கையா அங்கு …………………

1 நிற்பது 2. நிற்பவர்கள் 3. நிற்பவன் 4 நிற்பவர்

36. அவர்கள் நாட்டிற்குச் செய்யும் ஒவ்வொரு செயலும் ……………………..

1. மனம்வருந்தத்தக்கது. 2. மனம் வருந்தத்தக்கவை
3 மனம்வருந்தத்தக்கன 4. மனவருத்தமானவை

• **கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாக்கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

அடி வானத்தேயங்கு பரிதிக் கோலம்
அளப்பரிய விரைவினோடு சுழலக் காண்பாய்
இடிவானத் தொளி மின்னல் பத்துக் கோடி
யெடுத்தவற்றை யொன்றுபட வுருக்கி வார்த்து
முடிவான வட்டத்தைக் காளியாங்கே
மொய் குழலாய் சுழற்றுவதன் மொய்ம்புகாணாய்
வடிவான தொன்றாகத் தகடிரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து காண்பாய்

37. இக் கவிதை மூலம் கவிஞர் வாசகரிடம் ஏற்படுத்த முயலும் உணர்ச்சி

1. பயம் 2. ஏமாற்றம் 3. இழிவு 4. வியப்பு

38. இக்காட்சி இடம் பெறும் காலப்பொழுது

1. அதிகாலைப் பொழுது 2. அந்திப்பொழுது
3. பகற்பொழுது 4. அர்த்தசாமப் பொழுது

39. பரிதிக் கோலம் என்பது

1. நிலாக் கோலம் 2. நட்சத்திரக் கோலம்
3. சூரியக் கோலம் 4. பௌர்ணமிக் கோலம்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக்கிடக்கின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும் அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க

அ. காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை நிலம் ஆகும்.
ஆ. அகத்திணையின் ஏழு திணைகளுள் ஒன்றாக முல்லைத்திணை அமைகிறது.
இ. அதாவது கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லத்தில் இருந்து நல்லறம் செய்யும் இயல்பு இங்கு காட்டப்பட்டுள்ளது
ஈ. முல்லைத்திணை இல்லறம் பற்றிய ஒழுக்கத்தினைக் கொண்டுள்ளது.
உ. இந்நிலத்தின் பொழுது கார்கால மாலை ஆகும்.

1. ஆ, ஈ, உ, அ, இ 2. ஆ, அ, ஈ, உ, இ 3. ஆ, அ, ஈ, இ, உ 4. அ, ஆ, ஈ, இ, உ

40 x 1 =40 புள்ளிகள்

**கல்வியமைச்சு – E Thaksalawa** மாதிரி வினாப்பத்திரம் - 01

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**

**Tamil Language and Literature I, II**

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**கவனிக்க :**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

ii. இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

1. சுருக்கமான விடை எழுதுக.

i. பின்வரும் தொடரை சந்திபிரித்து எழுதுக.

"பெண்கடொழிலாமென்றே
பேசிடுவரொருசாரார்"

ii. கலம், களம் எனும் சொல்லின் பொருள் விளங்கத் தனித்தனி வாக்கியங்களை அமைக்குக.

iii. ஆனால் எனும் இணைப்பிடைச் சொல் தோன்றுமாறு வாக்கியமொன்றை அமைக்குக.

iv. வனிதா நோயால் மெலிந்தாள். இத்தொடரில் இடம்பெற்ற வேற்றுமை உருபு யாது? இது என்ன பொருளில் வந்துள்ளது?

v. கரகம், மருதம், வதனம், சீதனம், பந்தல் சொற்களை அகர வரிசைப்படுத்துக.

vi. எடிசன் மின்குமிழைக் கண்டுபிடித்தான். - இவ்வாக்கியத்தை செயற்பாட்டு வினையாக மாற்றுக.

vii. அறிக்கை எழுதும் போது கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் மூன்றினைத் தருக.

viii. மனனம் செய்தல், பாவனை பண்ணுதல், விடயம் பற்றிய முன்னறிவு, பாடும் ஆற்றல் இவற்றுள் நேர்முக வர்ணனையாளனுக்கு இருக்கவேண்டிய பண்புகள் இரண்டு தருக.

ix. கூட்டுப்பெயர்களுக்கு இரண்டு உதாரணங்களைத் தருக.

x. இரண்டு குழு விவாதத்தில் பங்குபற்றி அதில் ஒரு குழு வெற்றியீட்டியது. இவ்வாக்கியத்தில் வந்த வழுவை சுட்டி திருத்தி மீண்டும் எழுதுக.

(20 புள்ளிகள்)

[பக்.2 ஐப் பார்க்க

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடையெழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலைப்பு இடுக.

i. கல்வி நமக்கு வாழ்வளிக்கின்றது. அறிவை வளர்க்கும் கல்வி எம் வாழ்வை மேம்படுத்துகிறது. கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. இதனால் எல்லாவற்றையும் விட கல்வியே மேலானது. காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப கல்வியில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆனால் மனிதன் மனிதப் பண்புடன் வாழ சமயக் கல்வியை எக்காலத்திலும் கைவிடுதல் கூடாது. இளமையிலேயே சமய விழுமியங்களூடாக வாழ்வியல் சார்ந்த விழுமியங்களைக் கற்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் ஒரு **விளக்கக்கட்டுரை.**

ii. சமூக வலைத்தளங்களால் பல துறைசார்ந்த விடயங்களையும் இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்கின்றனர். எனினும் சில பாதகமான செயற்பாடுகளுக்கும் இளைஞர்கள் இதனைப் பயன்படுத்துகினறனர். பல்வேறு வகையான தீமைகளகை் கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நண்பர்கள் இருவருக்கிடையிலான ஓர் **உரையாடல்.**

iii. தாய்மொழியில் போதிய தேர்ச்சி பெறும் ஒருவராலேயே ஏனைய மொழிகளிலும் இலகுவாகத் தேர்ச்சி பெறமுடியும். இதற்கு சிறுவயதிலேயே தமிழ் மொழியை திறம்பட பற்றுடன் கற்கும் போது மொழியாளுமையை வளர்க்கலாம். தாய்மொழியை சிறுவயதிலேயே கற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நீர் ஆற்றும் **மேடைப்பேச்சு**

iv. பூபாலன் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்த காரணத்தால் ஏழை மக்களின் இன்னல்களை அறிந்ததில்லை. ஏழைகளை மதிப்பதில்லை. எதிர்பாராது இடம்பெற்ற விபத்தால் ஏழ்மைக்குள்ளான பூபாலன் வாழ்வில்........எனும் கருத்தை மையப்படுத்தி ஒரு **சிறுகதை**.

(25 புள்ளிகள்)

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

உலகம் சிந்தனையைக் கிளறி, ஆற்றலுக்குச் சிறகு வைத்து, விந்தையும், வியப்பும் மிகுந்த விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் பாதையிலே முன்னேறிச் செல்கிறது. எமது இருபத்தோராம் நூற்றாண்டு இவ் விஞ்ஞான வளர்ச்சியின் பயனாகத் தொழிநுட்பம் வளர்ச்சி கண்டது. இத்தொழில் நுட்பத்தின் அசுர வேக வளர்ச்சியானது தகவல் தொடர்பாடல் துறையிலே பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றது எனலாம். ஆரம்பக் காலங்களிலேயே முகபாவங்கள் சைகைகள், ஒலி மற்றும் பலவிதமாக தகவல்களை பரிமாறிக் கொண்ட மனிதன் காலப்போக்கில் தம் சனப்பெருக்கத்திற்கேற்பவும் தமது தேவைகளைக் கருத்திற்கொண்டும் தொழில்நுட்பத்திறன் கொண்ட தொடர்பாடல் ஊடகங்களை உருவாக்குவதற்கு முற்பட்டான். அவ்வகையில் தோற்றம் பெற்றவையே தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி, கணனி, தந்தி, தொலைநகல், போன்றவைகளாகும். இவற்றின் வளர்ச்சியும், விஞ்ஞான தொழில்நுட்பமும், ஒன்றினைந்து கைக்கோர்த்து உருவாக்கியதே ''இணையம்'' எனும் வலைப்பின்னலாகும். இன்று இவ்வுலகக்தையே தன் மாய வலைக்குள் கட்டிப்போட்டு வைத்திருக்கும் இணையமானது இன்றைய காலக் கட்டத்தைப் பொறுத்தவரை தொடர்பாடல் துறையில் இன்றியமையாததொன்றாக காணப்படுகின்றது. இன்று பரந்தளவில் பல் துறைகளில் புதுமைப்படைத்து வரும் இணையப் பயன்பாடுகள் எண்ணிலடங்காதவை. இவ்வரிய இணையத்தளத்தை நாம் பயன்படுத்த எமக்கு தொலைபேசி இணைப்புகள் (மோடம்) அவசியமாக காணப்படுகின்றது. அன்று வாய் மொழி மூலம் பேசத்தெரியாத மனிதன் இன்று பல மைல் தூரம் இருப்பினும் முகம் பார்த்து பேசுவதற்கு ஒரே காரணம் இணைய மேம்பாடாகும். இன்று இணையத்தில் உள்ள முக்கிய தொடர்பாடல் தொழில் நுட்ப வலையத்தளங்களான முகப்புத்தகம், மின்னஞ்சல், கீச்சகம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். முகப்புத்தகத்தை எடுத்துக் கொண்டால் சர்வதேச ரீதியில் எல்லோராலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் தகவல்களையும், செய்திகளையும் ஒருவருக்கொருவர் பரிமாரிக்கொள்ளலாம். அத்துடன் உலகளாவிய ரீதியில் நடைபெறும் பல நல்ல தகவல்களையும், உண்மைத் தகவல்களையும் தெரிந்துக்கொள்ள பயன்படுகின்றது எனலாம். மேலும் மின்னஞ்சல் மூலம் செய்திகள் முதற்கொண்டு பிரதிகள், பாடல்கள், படங்கள், நிழற்படங்கள், வரைபுகள், குறிப்பேடுகள் போன்றவற்றை பரிமாரிக் கொள்ளமுடிகன்றது. அத்துடன் இன்று பல முன்னனி நிறுவனங்கள் மின்னஞ்சலில் வேலை விண்ணப்பம் மற்றும் விளம்பரங்களை விளம்பரப்படுத்த பயன்படுத்துகின்றது. ஏனெனில், இன்று வேலை வாய்ப்பு தேடித்திரியும் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் இது நல்லதோர் வாய்ப்பாக அமைகின்றது. எனலாம்.

(10 புள்ளிகள்)

[பக்.3 ஐப் பார்க்க

4. பின்வரும் செய்யுளை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

விண்ணளைந்த மலைக்காட்டிற் கொடுங் குழம்பால்
வேகவைக்கும் ஆதவனின் தீப்பிழம்பில்
தண்ணீராய்ச் செந்நீராம் வியர்வை என்னும்
தன்னுதிரம் பாய்ச்சியே நீ உருக்கலைந்து
கண்காக்கும் இமை போலத் தேயிலையின்
கரு காத்துப் பயிராக்கிச் செடியுமாக்கிப்
பொன்னாக்கும் புது நிலவாய் மாற்றி விட்டாய்
வாயிற் பூட்டிய விலங்கு,
கையிற் றாங்கிய ஒடு
ஊனளித்த பயிருக்கே இறந்து பட்டும்
உடம்பினையே உரமாகப் பரிசளித்தாய்.

i. இப்பாடல் யாரை சுட்டிப் பாடப்படுகின்றது?
ii. சுட்டப்பட்ட நபர் உருக்குலைந்து போன காரணம் யாது?
iii. இப்பாடலில் காணப்படுகின்ற ஒரு அணியை இனங்கண்டு விளக்குக.
iv. ''வாயிற்பூட்டிய விலங்கு, கையிற் றாங்கிய ஓடு'' என்பதன் மூலம் வெளிப்படும் விடயம் யாது?
v. உடம்பு எதற்கு உரமாக்கப்படுகின்றதென கவிஞர் கூறுகின்றார்?

(10 புள்ளிகள்)

5. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து 100 சொற்களுக்கு குறையாது எழுதுக.

i. நீர் வாழுகின்ற பிரதேசத்தில் பேரூந்து சேவை உரிய நேரத்திற்கு இடம்பெறுவதில்லை. இதனால் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் பாதிக்கப்படுகின்றனர். பேரூந்தினை உரிய நேரத்திற்கு சேவையில் ஈடுபடத்தக் கோரி உமது பிரதேச போக்குவரத்துச் சபையின் அதிகாரிக்கு **100** சொற்களில் ஒரு **கடிதம்** எழுதுக.

அல்லது

ii. கடுமையான வெள்ளப்பெருக்கினால் பாதிப்படைந்து உமது கிராமத்தின் நலன்புரி நிலையமொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ள அயற் கிராம மக்களுக்கு நிவாரணப் பொருட்களையும், வேண்டிய சேவைகளையும் வழங்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி பொது நிறுவனம் ஒன்றின் செயலாளர் என்ற வகையில் உமது நிறுவனத்திற்கு சமர்ப்பிப்பதற்கான **அறிக்கை** ஒன்றினை **100** சொற்களில் எழுதுக.

.

(15 புள்ளிகள்)

***

**கல்வியமைச்சு – E Thaksalawa** மாதிரி வினாப்பத்திரம் - 01

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2022 (2021)**

**General Certificate of Education (Ord.Level) Examination - 2022 (2021)**

**தமிழ் மொழியும் இலக்கியமும் III** இரண்டு மணித்தியாலம்

**Tamil Language and Literature III** **Two hours**

## தமிழ் மொழியும் இலக்கியமும் III

**கவனிக்க :**

- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1.** சுருக்கமான விடை தருக.

i. ‘அண்ணல் யானை அணிதேர் புரவி ஆட்பெரும்
படையொடு மன்னர்க்கு இருக்க நிழலாகுமே..’
அ. இப்பாடலடி இடம்பெறும் இலக்கியம் யாது?
ஆ. இங்கு குறிப்பிடப்படும் நான்கு படைகளும் எவை?

ii. ‘கொங்கர்க் கமராபதி யளித்த கோவே..’
அ. இங்கு குறிப்பிடப்படும் மன்னன் யார்?
ஆ. ‘அமராபதி’ என்று குறிப்பிடப்படுவது எது?

iii. ‘அட்ச இருதயம்’ என்ற கலையை அவன் படித்திருந்தான்.
அ. ‘அவன்’ எனக் குறிப்பிடப்படுபவன் யார்?
ஆ. ‘அட்ச இருதயக்கலை’ என்றால் என்ன?

iv. ‘கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பர்
கவன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்..’
அ. இப்பாடலைப் பாடிய புலவர் யார்?
ஆ. ‘காயசித்தி’ என்பதன் பொருள் என்ன?

v. ‘கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்து பேதை புகல்’
அ. இங்கு பயின்று வந்துள்ள அணி யாது?
ஆ. ‘பள்ளி’ என்பதன் பொருள் யாது?

vi. ‘மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு
உயர்சினை மருதத் துறையுறந் தாழ்ந்து..’
அ. இப்பாடலடி பயின்று வந்துள்ள நூல் எது?
ஆ. இங்கு யாருடைய செயற்பாடு கூறப்படுகின்றது?

vii. ‘பிற உயிர்களைத் தம் உயிரில் கண்ட சமயநெறிச்
செல்வர் அவர்’
அ. இங்கு ‘அவர்’ என்று குறிப்பிடப்படுபவர் யார்?
ஆ. அவரின் இலட்சியம் யாது?

viii. ‘இடது கையின் பெருவிரலை ஊன்றி வெட்கிச் சிரித்தான்
அது ஒரு செத்த சிரிப்பு’

அ. இவ்வரிகளினூடாக வெளிப்படுத்தப்படும் அவலம் யாது?

ஆ. ‘செத்த சிரிப்பு’ என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

ix. ‘தம்மனைக்கோர் பசுவேண்டிற் றாம்பலகாற் பார்த்திருந்து
பின்னும் துணிவிலராய்ப் பேதுறுதல் மாந்தர் குணம்’

அ. இவ்வரிகளினூடாக கவிஞர் கூற விளைவது யாது?

ஆ. ‘பேதுறுதல்’ என்பதன் பொருள் யாது?

x. ‘நான் மனிதன் மனிதனுக்கு இயல்பான எதனையும்
நான் வெறுப்பதில்லை’

அ. இவ்வாறு கூறியவர் யார்?

ஆ. இக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுவது யாது?

(20 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுள் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

i. விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்
சதிகள் செய்வர், பொய்ச்சாத்திரம் பேசுவர்,
சாதகங்கள் புரட்டுவர் பொய்மை சேர்
மதியி னிற்புலை நாத்திகங் கூறுவர்
மாய்ந்தி டாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்.
கண்ணி லாதவர் போலத் திகைப்பர் காண்.

அ. தாம் விரும்பியதை அடைய முடியாதவர்களது இயல்பு எத்தகையது?

ஆ. இங்கு இடம்பெற்றுள்ள அணியைக் குறிப்பிட்டு, விளக்குக.

ii. மூடருக்கும் பேடருக்கும் முதியோர் மெலியோர்க்குந்
தேடருநல் லிரத்தினம்போற் றெரிவையரைச் சேர்த்துவரோ
பீடுடைய கல்விநலம் பெற்றிருக்கும் வாலிபர் யாம்
வேடுவரை வேட்பேமோ விளம்பாய் பசுங்கிளியே
விரும்புவமோ சந்நியாசம் விளம்பாய் பசுங்கிளியே.

அ. பெண்ணை மணம் முடிக்கத் தகுதியற்றவர்கள் யாவர்?

ஆ. தலைவனின் உண்மைக்காதல் எவ்வாறு வெளிப்படுகின்றது?

iii. மாத மூன்று மழையுள்ள நாடு
வருஷ மூன்று விளைவுள்ள நாடு
வேத மூன்றும் பலாவுள்ள நாடு
விஷேச மூன்றுங் குலாவுள்ள நாடு
போத மூன்று நலஞ்செயு நாடு
புவன மூன்று வலஞ்செயு நாடு
நாத மூன்றுரு வானகுற் றால
நாத ராரிய நாடெங்கள் நாடே

அ. விஷேசம் மூன்றும் எவை?

ஆ. குற்றால நாதரின் சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?

iv. முதல் நாளே நான் ஒரு பெரிய உண்மையைக் கண்டுபிடித்தேன். கணிப்பொறி என்பது ஒரு இராட்சச வேலைக்காரன். சொல்லும் வேலைகளை எல்லாம் கச்சிதமாகச் செய்யும், ஆனால் தவறான கட்டளைகளைப் பிறப்பித்து விட்டாலோ தானே எஜமானன் ஆகிவிடும். பிறகு நீங்கள் அதற்கு அடிமைதான். இன்னொன்று, பயந்து பயந்து இதை அணுகினால் அது எட்ட எட்டப்போய்விடும். எனது ஒன்பது வயது மகன் மீன்குஞ்சு நீந்துவது போல உற்சாகமாக அதனோடு ஒட்டிப்பழகிவிட்டான். கணிப்பொறியை அவனுக்கு நிரம்பவும் பிடித்துக்கொண்டது. அதுவும் தன்னுடைய இரகசியக் கதவுகளை அவனுக்கு தங்கு தடையின்றி திறந்துவிடத் தயாராகிவிட்டது.

அ. ஆசிரியர், கணிப்பொறி பற்றி தான் கண்டுபிடித்த உண்மையென எதனைக் குறிப்பிடுகின்றார்?

ஆ. 'மீன்குஞ்சு நீந்துவதைப் போல' என்ற உவமைத் தொடர் விளக்கி நிற்கும் பொருள் யாது?

v. தஞ்சாவூர்ப் பெரிய கோவில், கங்கை கொண்ட சோழபுரம், இசைக்கலை, பரதநாட்டியம் போன்றவை பக்தியால் இயற்றப் பெற்றவை அல்லது பக்தியால் வளர்ச்சியுற்றவை. இப்பக்தி பிற நாடுகட்கும் பரவியது. இந்தோனேசியாவிலிருக்கும் பிறம்பாணான் பானாத்தரான் கோயில்கள், கம்புச்சியாவிலிருக்கும் சில அரண்மனைகள், சிற்பங்கள், தாய்லாந்தில் கொண்டாடப்படும் திருவெம்பாவைத் திருநாள் இத்தமிழ்ப் பக்தியின் பயனென்றே கூற வேண்டும். உலகம் போற்றும் ஆடவல்லாரின் வடிவம் இப்பக்தியின் பயனென்பதை யார் மறுப்பார்? தமிழர் பண்பாடு பிறநாடுகட்குப் பரவுவதற்குப் பல்லவச் சோழர் படை வீரம் மட்டுமல்ல இப்பக்தியும் காரணமாக அமைந்தது.

அ. இந்தியாவில் பக்தியை வெளிக்காட்டும் கலைநிரம்பிய இடங்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?

ஆ. தமிழர்களின் பக்திசார்ந்த கலைகள் பிறநாடுகளில் பரவியமைக்கான சான்றுகள் யாவை?

(20 புள்ளிகள்)

**3. பாரதியார் சுயசரிதையில்,**

அ. பாரதியாரின் பிள்ளைக்காதல்

ஆ. அணிப்பிரயோகப் பயன்பாடு

என்பனவற்றை விளக்குக.

**அல்லது**

**கிருட்டிணன் தூதுச்சருக்கத்தில்,**

அ. கிருட்டிணனின் பெருமைகள்

ஆ. வீமனது வெஞ்சின உணர்வு

என்பன புலப்படுமாற்றை தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

4. **மூத்தம்மா** சிறுகதையில்,

அ. இயற்கை வர்ணனை

ஆ. காசிமின் குணப்பண்புகள்

ஆகியனவற்றை விளக்குக.

**அல்லது**

**நாவலர் எழுந்தார்** என்ற கட்டுரையில்,

அ. வை.விஸ்வநாதன்பிள்ளையின் ஆளுமை

ஆ. நாவலர் எழுந்து, நடந்து சென்ற விதம்

என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

- **5,6,7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

5. **குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்** எனும் கவிதையில்,

அ. இயற்கை வர்ணனைகள்

ஆ. உழவுத் தொழில்

ஆகியன பற்றி விபரிக்குக.

6. **தமிழ்ப்பண்பாடு** என்ற கட்டுரையில்,

அ. தமிழ்ப்பண்பாட்டின் வளர்ச்சி
ஆ. தமிழ் பக்தியின் மொழி
ஆகியன பற்றி விளக்குக.

7. **நீதிப்பாடல்களை** அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ. '**தேம்படுபனையின்…**' என்ற பாடலில் சிறியவர், பெரியவர் இயல்புகள்

ஆ. '**அடக்கமுடையார்..**' என்ற பாடலில் அடக்கமுடையவரின் இயல்புகள்

(10 புள்ளிகள்)

***